# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 07 புதன்கிழமை 23.07.2025 கதிர் 263







### சகோதரத்துவம் என்ற பெயரில்

# தமிழரின் உணர்வுகளை புண்படுத்தும் அநுர அரசு

### கொழும்பில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வில் விசனம்




கொழும்பு, ஜூலை 23

கறுப்பு ஜூலை வாரத்தில் சகோதரத்துவம் எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் அரசு முன்னெடுக்கும் நிகழ்வு தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது என்று கொழும்பில் இன்று நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவுவேந்தல் தின நிகழ்வில் விசனம் வெளியிடப்பட்டது

42 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் ஆரம்பமான கனத்தை சுற்றுவட்டத்தில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

வடக்கு தெற்கு சகோதரத்து அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் சிவில் சமூகத்தினர், மனித உரிமை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள், 2➤

# வெலிக்கடைப் படுகொலை குறித்தும் விசாரணை வேண்டும்!


### நாடாளுமன்றில் செல்வம் எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 23**

**தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்டோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வெலிக் கடைப்படுகொலை சம்பவம் தொடர்பில் அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.**

**நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.**

**“வெலிக்கடைச் சிறைச்சாலையில் கண்கள் பிடுங்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டே தோழர்கள்** 2➤



# பங்களாவுக்குள் பெண் கழுத்தறுத்துக் கொலை

### சந்தேகநபர் பொலிஸில் சரண்



நாவலப்பிட்டி, ஜூலை 23

நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய தோட்டத்தில் உள்ள பாழடைந்த பங்களாவுக்குள் பெண் ஒருவரின் கழுத்தை அறுத்துப் படுகொலை செய்த நபர், கம்பளை பொலிஸில் நேற்று சரணடைந்த நிலையில், மேலதிக விசாரணைக்காக நாவலப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய தோட்டத்தைச் சேர்ந்த 39 வயதான மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட 2➤

# அம்பாறையில் காதலியைக் கழுத்தறுத்து படுகொலை செய்த காதலன் உயிர்மாய்ப்பு





அம்பாறை, ஜூலை 23

இளம் பெண்ணைக் கழுத்தறுத்துக் கொலை செய்து அவரது பெற்றோரை வெட்டிப் படுகாயப்படுத்திய இளைஞர் தனது கழுத்தை அறுத்து தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தப் பயங்கரச் சம்பவம் அம்பாறை மாவட்டம், பதியத்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரங்கல பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண், அவரது காதலன் எனக் கூறப்படும் இளைஞரால் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் காதலனும் தனது கழுத்தை அறுத்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தனது காதலி எனப்படும் இளம் பெண்ணின் வீட்டுக்குப் பிரவேசித்த இளைஞர், அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு 2➤

### சம்பூர் மனித எச்சங்கள் தொடர்பில்

# ஜூலை 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவு



திருகோணமலை, ஜூலை 23

மூதூர், சம்பூர் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக எதிர்வரும் 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கும், தொல்பொருளியல் திணைக்களத்துக்கும் மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி.தஸ்னீம் பௌசான் உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பகுதிக்கு இன்று புதன்கிழமை விஜயம் மேற்கொண்டு கள ஆய்வை மேற்கொண்டிருந்த நீதிபதி, அங்கு வருகை தந்திருந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். 2➤

# யானை தாக்கி ஒருவர் மரணம்



திருகோணமலை, ஜூலை 23

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமேதங்கபுர எனும் பகுதியில் வைத்து யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 2➤

## பங்களாவுக்குள் பெண்.....

பெண், சந்தேகநபருடன் கம்பளை, புசல்லாவை பகுதியில் 9 மாதங்களாக வசித்து வந்துள்ளார் எனவும், நேற்று தனது சட்டபூர்வ கணவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார் எனவும், அங்கிருந்து மேற்படி நபருடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பெண் வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்தார் எனவும், அதற்குக் கள்ளத் தொடரைப் பேணிய நபர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தார் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி பெண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்திய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் பாழடைந்த பங்களாவுக்குள் அவரை அழைத்துள்ளார். அவ்வாறு சென்ற வேளையிலேயே கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெலிக்கடைப் படுகொலை.....

கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் எங்கே புதைக்கப்பட்டார்கள் என்பதை அறிய முடியாமல் உள்ளது. எனவே, கடந்தகால கொலைகள் பற்றி விசாரிக்கும் இந்த அரசு, வெலிக்கடைப் படுகொலை பற்றியும் விசாரிக்க வேண்டும். ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சிக் காலத்திலேயே இந்தச் ம்பவம் இடம்பெற்றது." - என்றும் செல்வம் எம்.பி. குறிப்பிட்டார்.

## ஜூலை 30ஆம் திகதி .....

இதன்போது சட்ட வைத்திய அதிகாரிக்கு அந்த இடத்தில் அகழ்வுப் பணியை முன்னெடுப்பது தொடர்பாக மிதிவெடி அகற்றும் நிறுவனத்துடன் கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், தொல்லியல் திணைக்களத்திடம் அந்த இடத்தில் மயானம் இருந்ததா என்பது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி, குறித்த அறிக்கைகளை இரு தரப்பினரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அந்த இடத்துக்கு அரச பகுப்பாய்வுத் திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் காணாமல்போனோர் அலுவலகம், குற்றவியல் தடய காட்சிகள் அலுவலகம் ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் இன்று வருகை தந்திருந்தனர்.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள

# மொனராகலையில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபப் பலி

*மொனராகலை, ஜூலை 23*

*மொனராகலை - வெல்லவாய, ரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரந்தேனியவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58 வயது நபரே உயிரிழந்துள்ளார்.*

*இவர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது வீதியில் இருந்த காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இது தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

கடற்கரையோரபி பகுதியில் MAG என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதியில் இருந்து சிதைந்த மனித மண்டையோடு மற்றும் எலும்புப் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அதையடுத்து மூதூர் பதில் நீதிவானின் உத்தரவுக்கலாமிய அகழ்வுப் பணிகள் இன்று வரை இடைநிறுத்தப்பட்டிருந்தன.

## அம்பாறையில் காதலியைக் ....

பெண்ணின் தாய் மற்றும் தந்தை மீதும் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த தாயும் தந்தையும் தற்போது மஹாஓயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொலை செய்யப்பட்டவர் 23 வயதான சரோஜா உதயங்கனி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையைச் செய்த இளைஞர் மொனராகலை பகுதியைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பதியத்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தமிழரின் உணர்வுகளை.....

சகோதரத்துவம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் கறுப்பு ஜூலை வாரத்தில் அரசு முன்னெடுக்கும் நிகழ்வு குறித்து விசனம் வெளியிட்டனர்.

தமிழ் மக்கள் நீதி வேண்டி நிற்கின்ற இந்தத் தருணத்தில் அவர்களுக்கு நீதி வழங்குவதற்குப் பதில் அரசு சகோதரத்துவம் என்ற பெயரில் ஆடல்பாடல்களில் ஈடுபடுகின்றது என்று கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

"கறுப்பு ஜூலை என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் உணர்வுபூர்வமான விடயம். ஆனால், தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் அரசு நிகழ்வுகளை நடத்துகின்றது." - என்று அவர்கள் விசனம் வெளியிட்டனர்.

"தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் விடயத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசுக்கும் அநுர அரசுக்கும் இடையில் வேறுபாடு இல்லை." - என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## யானை தாக்கி.....

இடம்பெற்றுள்ளது.

மூதூர் - மல்லிகைத்தீவச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா வர்ணகுரரெட்ணம் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தோப்பூர் -நாராயணபுரத்தைச் சேர்ந்த யோகராசா (வயது 46) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர்கள் சேருநுவர பொலிஸ் பிரிவில் உள்ள மாங்குளம் என்ற பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுவிட்டு தங்களுடைய வீட்டுக்குத் திரும்புகையிலேயே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் சேருவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உடற்கூற்றுபி பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரகக்கல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# உத்தியோகம் மனுஷ லட்சணம்!



வேலை என்று சொன்னாலே அது ஆண்களுக்கு மட்டும்தான் என்று ஒரு சாரார் நினைக்கிறார்கள். அது அப்படி அல்ல. பெண்களும் ஆண்களுக்கு நிகராக, ஏன் சில இடங்களில் ஆண்களைவிட அதிகமாகவே உழைக்கிறார்கள். வெளியில் உழைத்துவிட்டுக் களைத்து வந்தாலும் வீட்டில் கால் நீட்டிப் படுத்து ஓய்வெடுக்க இயலாது. ஏனெனில் வீட்டுப் பணிகள் வரிசை கட்டி நிற்கும். வெளியில் உழைக்கும் ஆண்கள் கூட்டம் வீட்டிற்கு வரும்போதே 'சுதி' ஏற்றிக் கொண்டு வருவதுண்டு. அல்லாவிடினும் வீட்டில் வந்து உடை மாற்றிக் கொண்டு தொலைக்காட்சியையோ அல்லது மொபைலையோ நோக்கிக் கொண்டு உட்கார்ந்து விடுவார்கள். ஏனென்றால் வீட்டு வேலை செய்வது பெண்களின் பொறுப்பு என்றும், ஆண்கள் செய்தால் அசிங்கம் என்றும் காலங்காலமாக மூளையின் ஒரு மூலையில் உருவேற்றி வைத்திருக்கிறது இந்தச் சமுதாயம்.

காலங் காலமாகப் பெண்கள் உழைத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால், அதை ஆண்கள் பொருட்படுத்துவது இல்லை என்பது எத்தனை வேதனையான விஷயம். ஆண், பெண் பாகுபாடு கூடாது என்று வெறும் வாய் வார்த்தையாக மட்டும் பேசிப் பயனில்லை. கொள்கை ரீதியாகவும் அது செயல்படுத்தப்பட வேண்டும். அதில் முக்கியமானது இருபாலருக்கும் சமமான ஊதியம் வழங்குவதுதான்.

பணியில் ஆண், பெண் என்கிற பேதம் இல்லை. சில வேலைகள் செய்ய அதிகமான உடல் உழைப்பு தேவைப்படும். சிலவற்றுக்குச் சாதாரண உழைப்பு போதும். ஆனாலும் சம்பளம் என்பது ஒரே வேலையில் இருக்கும் இருபாலருக்கும் ஒன்று போல் வழங்கப்படுவதில்லை. பெண் உழைப்புக்கு அஞ்சியவள் இல்லை. ஆனால், நம் நாட்டில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலும்கூட ஊதியம் வழங்குவது ஆண், பெண் என்கிற பேதத்தின் அடிப்படையில்தான். ஒரு சில பணிகளைத் தவிர இதரப் பணிகள் எல்லாவற்றிலும் ஊதிய விஷயத்தில் பாலின பேதம் நிச்சயம் இருக்கிறது. இதை எதிர்த்து யாரும் குரல் கொடுப்பது இல்லை. பெண்கள் மென்மையானவர்கள் என்று சொல்லிச் சொல்லியே மரபணுக்களில் உருவேற்றியிருக்கிறார்கள். அந்தளவுக்கு இதைப் பெண்களும் ஏற்றுக்கொண்டு நார்மலைஸ் ஆக்கி விட்டார்கள். அவ்வளவு ஏன், திரைப்படத் துறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் இருக்கிறதா? ஜென்ட்ஸ் சூப்பர் ஸ்டாருக்கும், லேடி சூப்பர் ஸ்டாருக்கும் சத்தியமாக ஒன்றுபோல் சம்பளம் வழங்கவே மாட்டார்கள். ஆனால், ஒரு படத்தின் வெற்றிக்கு அதன் கதாநாயகி என்னதான் உயிரைக் கொடுத்து நடித்திருந்தாலும், ஆண் ச்சும்மா 'நடந்து' வந்தாலே போதும் என்று சம்பளத்தை ஏற்றிவிட்டு ஜல்லியடிப்பார்கள். போதாக்குறைக்குப் பெண்களிடம் வயதையும் ஆண்களிடம் சம்பளத்தையும் கேட்கவே கூடாது என்று சொல்லியிருப்பது எவ்வளவு அநியாயம். ஏனென்றால் ஆணிடம் சம்பளத்தை விசாரிக்கும்போது பெண்ணின் சம்பளத்துடன் கட்டாயமாக ஒப்பிட்டுப் பார்த்துக் கேள்விகள் கேட்டுவிடக் கூடாது என்று முன்னெச்சரிக்கையாக இப்படிச் சொல்லி வைத்திருக்கிறார்கள் போலும். இப்போதுதான் எதிர்ப்புக் குரல்கள் பரவலாக எழ ஆரம்பித்து இருக்கிறது. இது வரவேற்கத் தகுந்த மாற்றம்.

உத்தியோகம் புருஷ லட்சணம் என்று சொல்வதை இனிமேல் மாற்றி உத்தியோகம் மனுஷ லட்சணம் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் வேலைக்குச் செல்வது என்பது புருஷர்களுக்கு மட்டுமே உரித்தான ஒன்று அல்ல. அவர்களைவிட அதிகமாக உழைக்கும் பெண்களுக்கும் இதில் பங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதனால் இருபாலருக்கும் பொதுவாக மனுஷ லட்சணம் என்று மாற்றுவதில் தவறு ஒன்றும் இல்லைதானே? பெண்கள் வேலைக்குச் செல்வதால் அவர்களது தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. பொது அறிவு விரிகிறது. பொருளாதாரத்தில் யாரையும் சார்ந்து வாழ வேண்டியதில்லை. அடுத்தவருக்குப் பாரமாக இருந்து சுய பச்சாதாபத்தில் மருகிக் கொண்டிருப்பதைவிடப் பணிபுரியச் செல்வது நல்லது.

ஆனால், இன்றும் கூடத் திருமணம் நிச்சயமாகும் போதே நிறைய பேர், “பெண் வேலைக்குச் செல்ல



வேண்டாம், வீட்டைப் பார்த்துக் கொண்டு, கணவனின் பெற்றோரைக் கவனித்துக் கொண்டு இருந்தாலே போதும்” என்று அன்பொழுகச் சொல்கிறார்கள். இது எவ்வளவு வடிகட்டிய அயோக்கியத்தனம் தெரியுமா?. முதலில் பெண்ணுக்குப் பணிபுரியச் செல்வதில் விருப்பம் இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டும். வீட்டைக் கவனித்துக் கொள்வது முழுக்க முழுக்கப் பெண்ணின் வேலை மட்டுமே அல்ல என்பதை ஆண்கள் முதலில் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இருவரும் இணையும் இல்லறத்தில் இருவரும் வீட்டு வேலைகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அதுபோலவே பொருளாதாரத் தேவைகளுக்கும் வேலைக்குச் செல்வதில் இருவரும் சரிசமமான உரிமைகளைப் பெற்றிருக்க வேண்டும். அப்புறம் பெண் கணவனின் பெற்றோரைக் கவனித்துக் கொள்வது போல ஆணும் மனைவியின் பெற்றோரைக் கவனித்துக் கொள்வதுதானே நியாயம்? ஆனால், அதற்கும் ஒரு முட்டுக்கட்டையை,”பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்த வீட்டில் உட்கார்ந்து சாப்பிடுவது அவள் பெற்றோருக்கு இழுக்கு.. மானங்கெட்ட செயல். தீரா அவமானம்..” என்றெல்லாம் சொல்லி வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் பெண் ஓர் ஆணின் உடமை, திருமணம் என்கிற ஒன்றைச் செய்து கொண்டு அழைத்து வந்த அடிமை என்பதை நேரடியாகவும், மறைமுகமாகவும் அவளுக்கும், இந்தச் சமுதாயத்துக்கும் அறிவித்துக் கொண்டே இருக்கும் ஒரு கீழ்மைச் செயலாகும். வளர்த்து, திருமணம் செய்து ஒரு வீட்டிற்கு அனுப்பிய பின் அந்தப் பெண்ணுக்கும் அவளது வீட்டுக்கும் எந்த விதமான நேரடி உறவும் இல்லை, அதோடு எல்லாம் முடிந்து போயிற்று என்று திரும்பத் திரும்பச் சொல்லி அவள் பெற்றோரைக் கவனிக்கும் பொறுப்புகளில் இருந்து அவளை வழுவச் செய்கிறார்கள். அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டாலும் அவளால் அதைப் பார்த்துக் கண்ணீர் வடிக்க மட்டும்தான் முடிகிறதே தவிர, நேரடியாக உதவிகள் எதுவும் செய்ய இயலுவதில்லை. அப்படியே செய்தாலும் அதற்கு கணவனின், அவன் குடும்பத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டி இருக்கிறது. இவையெல்லாம் மாற்றப்பட வேண்டிய விஷயங்கள்.

முக்கியமான ஒன்று. தாய்மை என்கிற ஒன்றை வலுக்கட்டாயமாகப் பெண்கள் மீது மட்டுமே ஏற்றிப் புனிதப்படுத்திக் கட்டமைத்து வைத்திருக்கிறார்கள். அன்பு, பாசம் எல்லாம் இருபாலருக்கும் பொதுவானதுதானே? பின் ஏன் பிள்ளை வளர்ப்பில் முழுப் பொறுப்பையும் பெண்ணின் தலையில் மட்டுமே கட்டுகிறார்கள் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பிள்ளை வளர்ப்பு என்பது சற்று ஆயாசமும் சோர்வும் தரும் வேலை என்பதுதான் உண்மை. திரைப்படங்களில் காட்டுவது மாதிரி யாரும் பாடி, ஆடி ஒரே பாடலில் பிள்ளையை வளர்த்துவிட முடியாது. அதிக உடல் உழைப்பும் நேரமும் கவனமும் தேவைப்படும் வேலை அது. பெண்ணும் பணிக்குச் செல்லும் பட்சத்தில் அவளால் எப்படி இந்த இரட்டைக் குதிரைகளில் அல்ல அல்ல மூன்று குதிரைகளில், அதாவது அலுவலகப் பணி, குழந்தை பராமரிப்பு, உதவிக்கு ஆளில்லாதவர்களுக்குக் கூடுதலாக வீட்டு வேலையும் சேர்த்து சவாரி செய்ய இயலும் என்றாவது யோசித்துப் பார்த்திருக்கிறோமா நாம்?. இதில் பிள்ளைகள் ஏதாவது சாதனை செய்தால்,”என் பிள்ளை என் ரத்தம் என் வம்சம் என் வித்து” என்றெல்லாம் பெருமை(?) பீற்றிக் கொள்ளும் ஆண்கள் அவர்கள் ஏதாவது தவறு செய்துவிட்டால் மட்டும் உடனே,”உன் பிள்ளை லட்சணத்தைப் பார்த்தாயா? உன் மகள் என்ன செய்திருக்கிறாள் பார்? நீ பெத்தது எப்படி எதிரத்து பேசுது பார்? வளர்த்த லட்சணம் அப்படி..” என்று சற்றும் கூசாமல் தாயைப் பார்த்து விரல் சுட்டிக் குற்றம் சாட்டுகின்றனர். எப்பேர்ப்பட்ட அயோக்கியத்தனம் இது? அதனால் இனியோர் ஒப்பந்தம் கொண்டு வர வேண்டும். அதாவது குழந்தை பெற்ற பின்பு தாய் பணி விடுப்பு எடுத்துக் கொண்டு குழந்தையைப் பாலூட்டி வளர்க்க வேண்டும். பால்குடி மறந்த பின்னர் தந்தை கட்டாயமாக அதே போல் ஒன்றிரண்டு வருடங்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு குழந்தையை வளர்க்க வேண்டும். அப்போதுதான் குழந்தைப் பராமரிப்பு குறித்தும், அதன் சிரமங்கள் குறித்தும் ஆண்களுக்குப் புரியவரும். இருவரும் சேர்ந்து வளர்த்தால் நாளை ஒருவரை மட்டும் எதற்கும் குற்றம் சாட்ட வேண்டிய கட்டாயம் இல்லை. இதையெல்லாம் சட்டமாக்கினால் பெண்கள் வாழ்வில் நிச்சயமாக ஒரு மாற்றம் வரும்.

ஆணோ பெண்ணோ யாராக இருந்தாலும் தனக்கான சுய சம்பாத்தியத்தைக் கையில் வைத்திருப்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியம். சோம்பித் திரியாமல், அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட அடுத்தவர் கையை எதிர்பார்த்துக் கொண்டிராமல் வேலையோ தொழிலோ தனக்கான நிலையான, நிரந்தர வருமானத்துக்கு வழிசெய்து கொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற பெண்களால்தாம் இந்தச் சமுதாயத்தை நல்ல விதமாக வடிவமைக்க முடியும். வாழ்வை இனிதாக வாழக் கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. கொஞ்சம் கவனமாகவும் உழைக்க வேண்டும். நம் வாழ்க்கை நம் கையில்.

# சீமானுக்கு 4 வாரங்களில் புதிய பாஸ்போர்ட் வழங்க மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு




நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு 4 வாரங்களில் புதிய பாஸ்போர்ட் வழங்க மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தாக்கல் செய்த மனுவில், வெளிநாடு செல்வதற்காக பாஸ்போர்ட்டை தேடிய போது அது காணாமல் போனது தெரிய வந்தது. அதனை தேட தீவிர முயற்சி செய்தும், கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால், புதிய பாஸ்போர்ட்டை வழங்கக் கோரி மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு விண்ணப்பித்த போது, நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளைச் சுட்டிக்காட்டி, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், புது பாஸ்போர்ட் வழங்கக் கோரிய விண்ணப்பத்தை நிராகரித்த உத்தரவை ரத்து செய்து, பாஸ்போர்ட் வழங்க உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், மண்டல பாஸ்போர்ட் அதிகாரியும், நீலாங்கரை காவல் நிலைய ஆய்வாளரும் அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை 22ம் தேதிக்கு தள்ளிவைத்தார். இந்நிலையில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு 4 வாரங்களில் புதிய பாஸ்போர்ட் வழங்க மண்டல பாஸ்போர்ட் அதிகாரிக்கு உத்தரவிட்டார். (ஐ)

## அஜித்குமார் குடும்பத்துக்கு ரூ.25 லட்சம் இடைக்கால நிவாரணம்: ஐகோர்ட் கிளை உத்தரவு





திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் குடும்பத்துக்கு இடைக்கால நிவாரணமாக ரூ.25 லட்சம் தர ஐகோர்ட் ஆணையிட்டுள்ளது. அஜித்குமார் மரண வழக்கில் நீதிமன்ற உத்தரவை முறையாக தமிழக அரசு நிறைவேற்றி உள்ளது. கூடுதல் இழப்பீடு தேவைப்பட்டால் மனுதாரர் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெறலாம் என ஐகோர்ட் கிளை தெரிவித்தது. வழக்கிற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது என ஐகோர்ட் கிளை நீதிபதிகள் கூறினர்.

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட வழக்கு விசாரணையில் தமிழ்நாடு அரசு ரூ.7.5 லட்சம் இழப்பீடும், இலவச வீட்டு மனை, அரசு வேலை வழங்கி உள்ளது. பாதுகாப்பு கோரி அஜித்குமார் தம்பி நவீன்குமார், சக்தீஸ்வரன், பிரவீன், அருண் ஆகியோர் வழக்கு தொடர்ந்தனர். பாதுகாப்பு கோரிய மனுவை நீதிமன்றம் 7 நாளுக்குள் விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்று ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன்



மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மூன்று நாட்கள் ஓய்வு மற்றும் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகிறார். மருத்துவமனையில் இருந்தபடியே அவர் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் இன்று (22.7.2025) அவர் அரசு தலைமைச் செயலாளர் முருகானந்தம் அவர்களுடன் அரசுப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

கடந்த 15.7 2025 தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் பணிகளின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டு அறிந்தார். இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், “மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத்தொடர்கிறேன். உங்களுடன்ஸ்டாலின் முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா, நேற்று வரையில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை தீர்வுகாணப்பட்டவை எத்தனை உள்ளிட்ட விவரங்களைத் தலைமைச் செயலாளரிடம் கேட்டறிந்து, மக்களின் மனுக்கள் மீது தீர்வு காண்பதில் எந்தவிதமான தொய்வும் ஏற்படக் கூடாது என அறிவுறுத்தியுள்ளேன்.” இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் ஆதார் விபரங்கள் எதுவும் வாங்கவில்லை






ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் ஆதார் விபரங்கள் எதுவும் வாங்கவில்லை. தவறான தகவலை அளித்து வழக்கு தொடரப்பட்டுள்ளது: உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் திமுக சார்பில் மூத்த வழக்கறிஞர் எம்.பி. வில்சன் முறையீடு செய்துள்ளார். மனுவாகத் தாக்கல் செய்தால் நாளை விசாரணைக்கு எடுப்பதாக நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் திமுகவினர் நடத்தி வரும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை முகாமின்போது பொதுமக்களிடம் இருந்து ஓடிபி எண் பெற இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக திருப்புவனத்தை சேர்ந்தவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் திமுக, ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடத்தி வருகிறது. இதற்காக திமுகவினர் அனைத்து வீடுகளுக்கும் சென்று, வீட்டில் இருப்பவர்களிடம் பல்வேறு ஆவணங்களைக் கேட்டு துன்புறுத்துகின்றனர். அனுமதி பெறாமல் வீட்டில் முதல்வர் படத்துடன் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என அச்சிடப்பட்ட சுவரொட்டியை ஒட்டுகின்றனர்.

குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் பிற அடையாள அட்டைகளைக் கேட்கின்றனர். அந்த ஆவணங்களைத் தர மறுத்த பெண்களிடம், மாதந்தோறும் அரசிடம் பெற்று வரும் ஆயிரம் ரூபாயை நிறுத்திவிடுவதாக மிரட்டியுள்ளனர். பின்னர் தனிப்பட்ட செல்போன் எண்களைப் பெற்று பதிவு செய்தனர். செல்போனுக்கு வந்த ஓடிபியை (ஒன் டைம் பாஸ்வேர்டு) கேட்டுப் பெற்று உறுப்பினர்களாகச் சேர்க்கின்றனர்.

இவ்வாறு அரசியல் காரணங்களுக்காக ஒருவரின் அனுமதியில்லாமல் பொதுமக்களின் தனிப்பட்ட விவரங்களை சேகரிப்பது குற்றச்செயலாகும். எனவே, பொது மக்களிடமும் இருந்து ஆதார் விவரங்களை திமுகவினர் சேகரிப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என அறிவிக்கவும், எந்த காரணத்துக்காகவும் ஆதார் விவரங்களைச் சேகரிக்கக் கூடாது என்றும், இதுவரை சேகரித்த ஆதார் மற்றும் தனிப்பட்ட விவரங்களை உடனடியாக அழிக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் திமுகவின் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை முகாமில் மக்களிடம் ‘ஓடிபி’ பெற இடைக்கால தடை விதித்தது. தடையை தொடர்ந்து திமுக சார்பில் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மூத்த வழக்கறிஞர் எம்.பி. வில்சன் அளித்த மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் “ஆதார் எண்ணைப் பயன்படுத்தி மூவீ பெறுவதாக தவறான தகவலை நீதிமன்றத்தில் கூறி தடை உத்தரவை அதிமுகவினர் பெற்றுள்ளனர். தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியல்படியே உறுப்பினர்களை சேர்க்கிறோம். ஆனால், உறுப்பினர் சேர்க்கை சம்மதம் பெறவே, செல்போன் எண் கேட்டு மூவீ பெறப்பட்டது.

வேறு எந்த ஆவணமும் வாங்கவில்லை என திமுக சார்பில் மூத்த வழக்கறிஞர் எம்.பி. வில்சன் முறையீடு செய்துள்ளார். (ஐ)

# பிரிக்ஸை மிரட்டும் டிரம்ப்: இந்தியா, சீனா, ரஷ்யா ஓரணியில் திரளுமா?



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடாமல் பிரிக்ஸ் கூட்டமைப்பை குறிவைத்து வருகிறார்.

பிரிக்ஸ் நாடுகளின் மீது வரிகள் விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார். இந்தக் குழு விரைவில் முடிவுக்கு வரும் என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசும்போது பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டாலரின் ஆதிக்கத்தைக் கைப்பற்ற முயற்சித்ததாகக் குற்றம்சாட்டிய டிரம்ப் கடினமான நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். எனினும் எந்த நாட்டின் பெயரையும் டிரம்ப் குறிப்பிடவில்லை.

பிரிக்ஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினர்களான இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா இடையே முத்தரப்பு உறவுகளை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் வேளையில் டிரம்ப்பிடமிருந்து இந்த அச்சுறுத்தல் வந்துள்ளது. சமீபத்திய பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்குப் பிறகு, இந்த கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் மீது வரிகள் அதிகரிக்கப்படும் என டிரம்ப் எச்சரித்திருந்தார்.

இந்தியா மற்றும் சீனா இடையேயான உறவுகளை இயல்புநிலைக்கு கொண்டு வர ரஷ்யா தொடர்ந்து முயற்சித்து வருகிறது, சீனாவும் அதற்கு நேர்மறையாக பதிலளித்துள்ளது.

சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பு இந்த மூன்று நாடுகளின் நலன்களை மட்டுமல்ல, இந்தப் பிராந்தியம் மற்றும் உலகத்தில் அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை பராமரிக்க உதவுகிறது என சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் லின் ஜியான் தெரிவித்துள்ளார்.(ஐ)

## திருவனந்தபுரத்தில் 5 வாரமாக சிக்கியிருந்த பிரிட்டனின் அதிநவீன போர் விமானம் புறப்பட்டது



இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் ஐந்து வாரங்களுக்கும் மேலாக நிற்கும் பிரிட்டனின் அதிநவீன போர் விமானம் இன்று புறப்பட்டுச் சென்றது.

கடந்த ஜூன் 14-ஆம் திகதீ, இந்தியப் பெருங்கடலின் மீது பறந்து கொண்டிருந்த போது மோசமான வானிலை காரணமாக, கேரளாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் கு-35பி விமானம் தரையிறக்கப்பட்டது. பின்னர், அதில் தொழில்நுட்பக் கோளாறு கண்டறியப்பட்டது.

இந்தியாவில் இவ்வளவு நீண்ட காலம் இந்த விமானம் தங்கியிருந்தது மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தியது. இவ்வளவு நவீன விமானம் எப்படி ஒரு வெளிநாட்டில் இவ்வளவு நாட்கள் சிக்கியிருக்க முடியும் என்ற கேள்விகளையும் எழுப்பியது.

எச்.எம்.எஸ். (HMS) பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் போர்க்கப்பலைச் சேர்ந்த கு-35பி விமானம் திரும்ப முடியாமல் போனதால், ராயல் கடற்படையின் பொறியாளர்கள் அதைச் சரிசெய்ய வந்தனர். ஆனால், அவர்களால் விமானத்தைப் பழுதுபார்க்க முடியவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன், பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் 14 பொறியாளர்கள் கொண்ட குழுவை, "திருவனந்தபுரம் விமான நிலையத்துக்கு கு-35பி விமானத்தை ஆய்வு செய்து பழுதுபார்க்க" அனுப்பியதாகத் தெரிவித்தது.

அந்தக் குழு, விமானத்தின் இயக்கம் மற்றும் பழுது பார்க்கும் செயல்முறைக்குத் தேவையான சிறப்பு உபகரணங்களுடன் வந்ததாக ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

அப்போது எடுக்கப்பட்ட வீடியோக்களில், கு-35பி விமானம் இழுத்துச் செல்லப்படுவது தெரிந்தது.

தொழில்நுட்ப வல்லுநர்களால் விமானத்தை சரிசெய்ய முடியாவிட்டால், அதைப் பிரித்து சி-17 குளோப்மாஸ்டர் போன்ற பெரிய சரக்கு விமானத்தில் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும் என்பது போன்ற ஊகங்கள் இருந்தன.

கடந்த இரண்டு வாரங்களாக, இந்தியாவில் உள்ள பிரிட்டன் தூதரகமும் பாதுகாப்பு அதிகாரிகளும் பழுதுபார்ப்பு விவரங்களைப் பகிர்ந்து கொள்ள மாட்டோம் என்று பிபிசியிடம் தெரிவித்தனர்.

ஆனால் திங்களன்று, "விமானம் பறக்கத் தகுதியாகி விட்டது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது" என்று விமான நிலைய அதிகாரி ஒருவர் பிபிசியிடம் கூறினார்.


செவ்வாய்க் கிழமை புறப்பட்டுச் சென்றுள்ள அந்த விமானத்திற்கு, லண்டனுக்கு செல்லும் வழியில் எந்த விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பப்படும்" என்பது இன்னும் தெரிவிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவைச் சேர்ந்த லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் எஃப்-35பி போர் விமானங்கள் மிகவும் நவீன ஸ்டெல்த் (எதிரி ரேடார்களுக்கு எளிதில் புலப்படாத) போர் விமானங்களாகும். குறுகிய தூரத்தில் மேலெழும்பிப் பறக்கும் திறன் மற்றும் செங்குத்தாகத் தரையிறங்கும் இவற்றின் ஆற்றல் மிகவும் பாராட்டப்படுகிறது.

திருவனந்தபுரம் விமான நிலைய ஓடுதளத்தில் தனியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "எஃப் -35பி" விமானம் கேரளாவின் பருவமழையில் நனையும் காட்சிகள் சமூக வலைதளங்களில் நகைச்சுவைகளும், மீம்ஸ்களும் உருவாகக் காரணமாக அமைந்தன.

"கடவுளின் சொந்த நாடு" என்று வர்ணிக்கப்படும் கேரளாவின் இயற்கை அழகை விட்டு இந்த விமானம் வெளியேற விரும்பவில்லை என்று பலரும் கூறத் தொடங்கினர். மேலும், 110 மில்லியன் டாலர் (80 மில்லியன் யூரோ) மதிப்புள்ள இந்த போர் விமானம் சிக்கியிருந்த விவகாரம், பிரிட்டன் நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அணை கட்டுவதால் இந்தியா-வங்கதேசத்திற்கு என்ன பாதிப்பு?



சீன அதிகாரிகள், உலகின் மிகப்பெரிய புனல் மின்நிலைய அணையை திபெத்திய பிரதேசத்தில் கட்டத் தொடங்கியுள்ளனர். இந்தத் திட்டம் இந்தியா மற்றும் வங்கதேசத்தில் கவலைகளை எழுப்பியுள்ளது.

உள்ளூர் ஊடகங்களின் கூற்றுப்படி, யார்லுங் சாங்போ ஆற்றில் (இந்தியாவில் பிரம்மபுத்திரா என அழைக்கப்படும் ஆறு) கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்காக சனிக்கிழமை நடைபெற்ற விழாவிற்கு சீனப் பிரதமர் லி கியாங் தலைமையேற்றார்.

இந்த ஆறு திபெத்திய பீடபூமி மற்றும் பல தெற்காசிய நாடுகளின் வழியாக பாய்கிறது. ஆற்றின் ஓட்டத்தின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் லட்சக்கணக்கான இந்தியர்கள் மற்றும் வங்கதேச மக்கள் மட்டுமல்லாது அப்பகுதி சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் திபெத்தியர்கள் மீது ஏற்படுத்த சாத்தியமுள்ள தாக்கம் காரணமாக விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த திட்டம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து உள்ளூர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என சீன அரசு தெரிவித்துள்ளது.

மோடு புனல் மின் நிலையம் எனவும் அழைக்கப்படும் இந்த 12 பில்லியன் யுவான் (கூ1.67 பில்லியன் +1.25 பில்லியன்) மதிப்பிலான திட்டம் நிறைவடையும்போது, த்ரி கோர்ஜஸ் அணையை பின்னுக்கு தள்ளி, உலகின் மிகப்பெரிய புனல் மின் நிலையமாக மாறி அதைவிட முன்று மடங்கு அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடும். (ஐ)



# அரசியலை ஒருபோதும் விரும்பவில்லை: எலான்

அரசியலை ஒருபோதும் விரும்பவில்லை ஆனால் வேறு வழியில்லாமல் கட்சித் தொடங்கினேன் என எலான் மஸ்க் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் பிரபல தொழிலதிபரான எலான் மஸ்க், அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து 'அமெரிக்கா கட்சி' எனும் அரசியல் கட்சியைத் தொடங்குவதாக ஜூலை முதல் வாரத்தில் அறிவித்தார்.

இந்த நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய எலான் மஸ்க், எனக்கு அரசியலில் நுழைவது என்பதில் சற்றும் விருப்பமில்லை. நான் ராக்கெட் தயாரிக்கிறேன், கார்களை, கருவிகளை உருவாக்குகிறேன். ஆனால், தேர்தல் பிரசார வசனங்களை அல்ல. என் நிறுவனம் தயாரிக்கும் பொருள்களை மக்கள் பயன்படுத்துவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். அதைத் தவிர வேறு எனக்கு எதிலும் ஆர்வமமில்லை. ஆனால், எப்போது, இந்த நாட்டின் அமைப்பு மிக மோசமாக உடைந்து போயிருக்கிறதோ, அப்போது என்னால் அமைதியாக இருக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்துக்கு மோசமான ஆபத்துகள் காத்திருக்கும் என்பதால் வேறு வழியின்றி, அரசியல் கட்சித் தொடங்குவது என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறேன் என்று பேசியிருக்கிறார்.

அவர் சிரித்தபடி, மிக சாதாரண உடல் அசைவுகளுடன் மக்களிடையே பேசும் விடியோவையும் அமெரிக்கா கட்சியின் எக்ஸ் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதில் வழக்கத்துக்கு நேர்மாறாக ஒரு மஞ்சள் நிற துண்டை எலான் மஸ்க் அணிந்திருப்பது, நம்ம ஊர் மக்களிடையே பேசுபொருளாகியிருக்கிறது. இந்திய அரசியல்வாதிகள் போல தோளில் துண்டுபோட்டிருப்பதாக பலரும் அந்த விடியோவில் கருத்துகளை பதிவு செய்திருக்கிறார்கள்.

(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல – 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி23.07.2025 இல் வெளியிடப்பெற்றது